# திருப்பத்தூர் நகராட்சி

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ம் நாள் நடத்தப்பட்ட சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல்.

1) **கீழ் குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களின் நாட்குறிப்புகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.**

அ) திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்தின் நாட்குறிப்புகள்.

ஆ) திருப்பத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்தின் நாட்குறிப்புகள்.

**நகரமன்ற தீர்மானம் எண்.32 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

2) திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் வார்டு 1 முதல் 36 வரை உள்ள தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளை M/s.சஞ்சய் டிரேடர்ஸ், தருமபுரி என்பவர் மேற்கொண்டு வந்தார். இவரின் பராமரிப்பு காலம் 31.03.2022–ல் முடிவடைந்ததால் ஏப்ரல் முதல் ஜூன் வரை உள்ள காலத்திற்கு தெருவிளக்குகள் பராமரிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1416/2016/இ1)

**நகரமன்ற தீர்மானம் எண்.33 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

3) திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3611/2021/அ–4, நாள்.11.03.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வார்டு 24க்குட்பட்ட அப்பாய் தெரு பூங்காவில் சுற்றுச்சுவர் மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள் அமைத்தல் | ரூ.2.00 இலட்சம் |
| 2 | வார்டு 24க்குட்பட்ட ஜார்ஜ்பேட்டை பூங்காவில் சுற்றுச்சுவர் மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள் அமைத்தல் | ரூ.2.00 இலட்சம் |

ந.க.எண்.938/2019/இ1

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மானம் எண்.34 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**4)** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினத்திற்கு நகரமன்ற தீர்மான எண். 245 நாள்.31.12.2021–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 17.03.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. Offline-ல் 1.**KVM Constructions, எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்.** 2. P & B எண்டர்பிரைசஸ்,1H, சக்தி நகர், எண்.46, புதூர், கருக்கம்பாளையம், ஈரோடு-02 ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. Online ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை கீழ்கண்டுள்ளவாறு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விவரம் (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | **KVM Constructions<br>எண்.44, ஆலங்காயம் ரோடு,<br>வெங்களாபுரம் கிராமம்,<br>திருப்பத்தூர்.** | **445.00** | **0.20 % குறைவு** |

மேற்படி பணிக்கு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த **KVM Constructions, எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் KVM Constructions, **எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்** நிறுவனத்தின் விலையினை ஏற்று பணி உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

(ந.க எண்.1931/2021/எச்1)

**நகரமன்ற தீர்மானம் எண்.35 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**5)** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் தனியார் மூலம் DBC பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.227, நாள்.20.12.2021–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 17.03.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. Offline-ல் 1.**KVM Constructions, எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்.** 2. P & B எண்டர்பிரைசஸ்,1H, சக்தி நகர்,எண்.46, புதூர், கருக்கம்பாளையம், ஈரோடு-02 ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. Online ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை கீழ்கண்டுள்ளவாறு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விவரம் (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | KVM Constructions<br>**எண்.44, ஆலங்காயம் ரோடு,**<br>**வெங்களாபுரம் கிராமம்,**<br>**திருப்பத்தூர்.** | **348.00** | **0.14 % குறைவு** |

மேற்படி பணிக்கு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த KVM Constructions, **எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் KVM Constructions, **எண்.44, ஆலங்காயம் ரோடு, வெங்களாபுரம் கிராமம், திருப்பத்தூர்** நிறுவனத்தின் விலையினை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

(ந.க எண்.1810/2021/எச்1)

**நகரமன்ற தீர்மானம் எண்.36 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

6) திருப்பத்தூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திரு.எஸ்.ரவி என்பவர் மனு அளிக்கப்பட்டு உதவி பொறியாளரின் குறிப்பின்படி இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரராக ரூ.6.00 இலட்சத்திற்கு பணி செய்ய பதிவு கட்டணம் ரூ.1000/– மற்றும் வைப்புத்தொகை ரூ.10,000/–ஐ செலுத்துமாறு இந்நகராட்சி அறிவிப்பு கடிதம் 18.03.2022–ல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டு மனுதாரர் நகராட்சி கருவூலத்தில் பதிவு கட்டணம் ரூ.1000/– பற்றுச்சீட்டு எண்.033/TP2/1/21–22/0010859 மற்றும் வைப்புத்தொகை ரூ.10,000/– பற்றுச்சீட்டு எண்.033/TP2/1/21–22/0010861, 24.03.2022–ல் செலுத்தியுள்ளார் எனவே மேற்படி மனுதாரர் திரு.எஸ்.ரவி என்பவரை இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 787/2020/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.37 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

7) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கி கொண்டிருக்கும் ஈப்பு வாகனம் எண்.TN23D8444க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரி செய்திட அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஜெயின் கார்ஸ், வேலூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு 28.12.2021–ல் வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு பில் பட்டியல் தொகை ரூ.2,12,816.09 வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மேற்படி நிறுவனத்திற்கு பணி மேற்கொண்டமைக்கு பில் பட்டியல் தொகை ரூ.212816.09-ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1850/2021/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.38 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

8) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பொது இடத்தில் திருமதி எம். ஞானசெல்வி க/பெ மணிவாசகம், அன்னை தெரச மகளிர் சுயஉதவிக்குழு, 9/10 இரட்டை மலை சீனிவாசன் தெரு, திருப்பத்தூர் (பெறுநர்- திரு. சிவராமன், திட்ட இயக்குநர்/ இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பூமாலை வணிக வளாகம், அண்ணாசாலை, வேலூர்) அவர்களுக்கு இந்நகராட்சி கடிதம் ந.க.எண்2234/2018/எப்1 நாள்28.11.2018-தேதியன்று கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெல்மா அங்காடி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) போக்குவரத்துக்கும் , பொது மக்களுக்கும் இடையூறு இருக்கக் கூடாது.
2) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தரை இடம் பின்வரும் காலங்களில் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் கடையினை உடன் அப்புறப்படுத்த வேண்டும்.
3) அங்காடி பாதுகாப்பிற்கு அசம்பாவிதம் ஏற்பட்டால் தாங்களே முழு பொறுப்பிற்கு உள்ளாக்கப்படுவீர்கள்.
4) நிர்ணயிக்கப்பட்ட வாடகை பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் அலுவலக கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
5) இந்த உத்திரவு எக்காலத்திற்கும் நிரந்தரமானதல்ல, வழக்கு சம்மந்தமாக எந்த நிகழ்வுகளுக்கும் இவ்வுத்திரவு பொறுப்பாகாது.

மேற்காணும் நிபந்தனைகள் ஏதும் கடை உரிமையாளரால் பின்பற்றபடவில்லை, நகராட்சிக்கு வாடகை ஏதும் செலுத்தப்படவில்லை. போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூராக உள்ளதாலும், நகராட்சிக்கு தற்பொழுது இடம் தேவைப்படுவதாலும் திரு.எம்.ஞானசெல்வி க/பெ மணிவாசகம், அன்னை தெரச மகளிர் சுயஉதவிக்குழு . அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம் ரத்து செய்யவும், புதிய பேருந்து நிலையத்தில் வெல்மா அங்காடி பெயரில் இயங்கும் கடையினை அப்புறப்படுத்த அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி கடை புதிய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இணடயூராக உள்ளதாலும் , நகராட்சிக்கு இழப்பீடு ஏற்படுத்தியும் / வாடகையின்றி வெல்மா பெயரில் இயங்கும் (மாற்று பொருள் விற்பனை செய்யும்) கடையினை அப்புறப்படுத்த அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.130/2021/எப்1

**நகரமன்ற தீர்மானம் எண்.39 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

9) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி அலுவலகத்தை ஒட்டியுள்ள லட்சுமணன் தெருவில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பழைய ICDS பள்ளி ஒட்டியே, நகராட்சிக்கு சொந்தமான இடம் மற்றும் தெருவில் 1. திரு. சேகர், நெ.6 லட்மணன் தெரு, 2. திருமதி. பாலம்மாள், கதவு எண் 6எ லட்சுமணன் தெரு, என்பவர்களால் வார்டு எண் 1 பிளாக் –14 நகரளவு எண் 339/29, 65–யில் சுமார் 3658 சதுர அடிகள் நகராட்சி இடத்தை ஆக்கிரமித்து குடிசை வீடு அமைத்துள்ளனர். மேற்படி நகராட்சிக்கு சொந்தமான இடம் மற்றும் தெரு என்பதால், பல வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள குடிசை வீடு மற்றும் தெருவினை மறைத்து போக்குவரத்து தடை செய்து கட்டியுள்ள காம்பவுண்ட் சுவற்றினை அப்புறப்படுத்தவும், அவ்விட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள சொத்து வரி விதிப்பு எண் 033/11304, மற்றும் 033/11305, குடிநீர் வரி விதிப்பு எண் 033/3804–யை ரத்து செய்யவும் அனுமதி கோரி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள குடிசை வீடு மற்றும் தெருவில் உள்ள காம்பவுண்ட் சுவற்றினை அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
3) சொத்து வரி விதிப்பு மற்றும் குடிநீர் வரி ஆகியவற்றை ரத்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.130/2022/எப்1

**நகரமன்ற தீர்மானம் எண்.40 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

10) திருப்பத்தூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திருமதி.டி.பிரேமாவதி க/பெ. ரகுநாத் என்பவர் மனு அளிக்கப்பட்டு உதவி பொறியாளரின் குறிப்பின்படி இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரராக ரூ.6.00 இலட்சத்திற்கு பணி செய்ய பதிவு கட்டணம் ரூ.1000/– மற்றும் வைப்புத்தொகை ரூ.10,000/–ஐ செலுத்துமாறு இந்நகராட்சி அறிவிப்பு கடிதம் 25.03.2022–ல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டு மனுதாரர் நகராட்சி கருவூலத்தில் பதிவு கட்டணம் ரூ.1000/– பற்றுச்சீட்டு எண்.033/TP2/1/21–22/0011515 மற்றும் வைப்புத்தொகை ரூ.10,000/– பற்றுச்சீட்டு எண்.033/TP2/1/21–22/0011516, 29.03.2022–ல் செலுத்தியுள்ளார் எனவே மேற்படி மனுதாரர் திருமதி.டி.பிரேமாவதி க/பெ. ரகுநாத் என்பவரை இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மானம் எண்.41 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

11) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் பொது இடத்தில் திரு.எம்.பிராபகர், இணை இயக்குநர் / பொது மேலாளர், வேலூர் – திருவண்ணாமலை, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் லிமிட். 142 ஆற்காடு சாலை, சத்துவாசாரி வேலூர் அவர்களுக்கு இந்நகராட்சி கடிதம் ந.க.எண்2234/2018/எப்1 நாள்07.11.2018–தேதியன்று ஆவின் பாலகம் அங்காடி அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) போக்குவரத்துக்கும் , பொது மக்களுக்கும் இடையூறு இருக்கக் கூடாது.
2) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தரை இடம் பின்வரும் காலங்களில் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் கடையினை உடன் அப்புறப்படுத்த வேண்டும்.

3) அங்காடி பாதுகாப்பிற்கு அசம்பாவிதம் ஏற்பட்டால் தாங்களே முழு பொறுப்பிற்கு உள்ளாக்கப்படுவீர்கள்.
4) நிர்ணயிக்கப்பட்ட வாடகை பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் அலுவலக கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
5) இந்த உத்திரவு எக்காலத்திற்கும் நிரந்தரமானதல்ல, வழக்கு சம்மந்தமாக எந்த நிகழ்வுகளுக்கும் இவ்வுத்திரவு பொறுந்தாது.

மேற்காணும் நிபந்தனைகள் ஏதும் கடை உரிமையாளரால் பின்பற்றபடவில்லை, அதில் ஆவின் பொருட்கள் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை. அதில் டீ, வடை, போண்டா போன்றவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் வாடகை ஏதும் நகராட்சிக்கு செலுத்தப்படவில்லை. மேற்படி 30x15 அளவில் நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூராக உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி திரு.எம். பிராபகர், இணை இயக்குநர்/பொது மேலாளர், வேலூர் – திருவண்ணாமலை, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் லிமிட்.,142 ஆற்காடு சாலை, சத்துவாசாரி வேலூர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம் ரத்து செய்யவும், பழைய பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் உள்ள ஆவின் பாலகம் என்ற பெயரில் இயங்கும் கடை அக்கிரமிப்பு மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் சுகாதார கோடு விளைவிக்கும் வகையில் கழிப்பிடம் அருகில் உள்ள ஆவின் பாலகம் ஆகியவற்றை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பழைய பேருந்து நிலைய நுழைவு வாயிலுள்ள கடை மற்றும் புதிய போருந்து நிலையத்தின் உள்ளே உள்ள கடை ஆகியவை போக்குவரத்துக்கும் , பொது மக்களுக்கும் இடையூராக உள்ளதாலும், நகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வாடகையின்றி உள்ளதாலும் நகராட்சியின் மூலம் கடையினை அப்புறப்படுத்த அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.130/2021/எப்1

**நகரமன்ற தீர்மானம் எண்.42 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**12)** தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு

அரசாணை(நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |

| | |
|---|---|
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் திருப்பத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | **3.25** |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | **1.34** |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | **39.43** |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | **5.36** |
| | **மொத்தம்** | **49.38** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், திருப்பத்தூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.304/2022/அ1)**

**நகரமன்ற தீர்மானம் எண்.43 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

13) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பாதாள சாக்கடை பணிகள் நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டும், தற்போது சாலைகள் அமைக்கப்பட்டும் வருகிறது. இந்நகராட்சி பகுதிகளில் 930 எண்ணிக்கையில் தெருக்கள் உள்ளன. 87.432 கி.மீ அளவில் கழிவுநீர் கால்வாய்கள் உள்ளது. கழிவுநீர் கால்வாய்கள் புதுப்பேட்டை ரோடு, காமராஜ்நகர் , பெரியார் நகர் ஏரிகரை பகுதியில் உள்ள பெரிய கழிவுநீர் கால்வாயில் இணைகின்றன. இதனால் நகரின் பிறபகுதிகளில் முக்கிய கால்வாய்கள் அப்துல் மாலிக் தெரு, பூராமஜித் தெரு , புதூர் மாரியம்மன் கோவில் தெரு வழியே வெள்ளவாய்க்கால் இணைகிறது. இதுமட்டுமின்றி ஆரிப் நகர் , ஜார்ஜ்பேட்டை பகுதிகளிலும் இணைகின்றது. மேலும் சிவராஜ்பேட்டை, கோவிலூர் ரோடு, போஸ்கோ நகர், கலைஞர் நகர், அண்ணா நகர். டி.எம்.சி காலனி, கௌதம்பேட்டை, முத்தப்பர் தெரு, பொன்னியம்மன் கோவில் தெரு ,எல்லம்மன் கோவில் தெரு, கோட்டை தெரு, இமாம் சாயுபு தெரு, ஆரிப் நகர், இஸ்திமா நகர் உள்ளிட்ட பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் முழுவதும் நிரம்பிய நிலையில் உள்ளது. எனவே, நகரின் அனைத்து வார்டுகளிலும் கழிவுநீர் கால்வாய்களை போர்கால அடிப்படையில் JCB இயந்திரம், மினி ஹிட்டாச்சி, டிராக்டர் மற்றும் இதர இயந்திரங்கள் உதவியுடன் தூர்வாரி அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்குரிய தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பொது சுகாதாரப் பணிகளின் அவசியத்தினை கருதி, இந்நகராட்சி கால்வாய்களை தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0272/2022/எச்1)

**நகரமன்ற தீர்மானம் எண்.44 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

14) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் LCV வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரித்தல், குப்பைகளை தரம் பிரித்து பெறுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு பொது சுகாதரப்பிரிவில் 6 எண்ணிக்கையில் LCV வாகனங்கள் (Light Commercial Vehicle) டிப்பர் லாரி –1, JCB –1, Jet Rodding வாகனம்–1 பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2022–2023 ஆண்டில் மேற்படி வாகனங்களுக்கு பேட்டரிகள் மற்றும் டயர்கள் வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

பொது சுகாதாரப் பணிகளின் அவசியத்தினை கருதி, பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு பேட்டரிகள் மற்றும் டயர்கள் வாங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0268/2022/எச்1)

**நகரமன்ற தீர்மானம் எண்.45 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

15) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1–ல் இரட்டை மலை சீனிவாசன் பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் பரப்பளவு 4.38.38 ஹெக்டர் அல்லது 10.79 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்திற்கு நிலப்பயன் மாற்றம் செய்ய திருப்பத்தூர் நகராட்சி முழுமைத் திட்டத்தில் சர்வே வார்டு –1, பிளாக்–2 நகரளவு எண் 194/2–யில் Mixed Residential use –MR என்றும் மற்றும் 226/1 –யில் Commercial use –C2 என்றும், மற்றும் வார்டு –1, பிளாக் –13 நகரளவு எண் 325–யில் Mixed Residential use –MR என்றும் நில உபயோக வகைபாடு உள்ளது.

மேலும் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கட்டுமான பரப்பு ஏழு தளங்கள் சேர்த்து 27376.00 Sqm –ல் அமைந்துள்ளதால், Annexure XVII (Sec Rule 33) Zoning Regulation Residential use Zone –யில் விதி VIII–இன் படி Government / Semi Government Offices Occupying a Floor area not exceeding 300 Sqm என உள்ளதால் இவ்வுத்தேசம் அமையும் மனையிடத்தினை நிறுவனம் சார் நிலப்பயன்பாட்டிற்கு (Institutional use zone) நில உபயோக மாற்றம் செய்ய வேண்டும்.

எனவே மேற்படி புதியதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டுமானம் நடைபெறும் இடத்திற்கு நிலப்பயன் மாற்றம் செய்ய பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்களை பெறுவதற்கு விளம்பரத்தினை மாவட்ட அளவிலான தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணம், விளம்பரம் செய்ய விளம்பர கட்டண செலவின தொகையினை வழங்கவும், கருத்துக்களை பெற்று நகராட்சி மூலம் பரிந்துரை செய்து அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதிய மாவட்ட ஆட்சித்தலைவரின் கட்டடம் மற்றும் அரசு துறை சார்ந்த கட்டடம் என்பதால் கட்டணம் இல்லாத செய்தி தாள் விளம்பரம் செய்து தரக் கோரி மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம்.
3. நகராட்சி மூலம் புதியதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டுமானம் நடைபெறும் இடத்திற்கு நில உபயோக பயன்பாட்டிற்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பலாம்.

ந.க.எண்.290/2022/எப்1
**நகரமன்ற தீர்மானம் எண்.46 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

16) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குப்'பைகளை தரம் பிரித்து பெறுதல் பணிகளுக்காக 6 எண்ணிக்கையில் LCV வாகனங்கள் (Light Commercial Vehecle) பயன்படுத்தப்பட்டு வருகிறது. LCV வாகனங்களின் காப்பீடு முடிந்த நிலையில் இயங்கி வருகிறது. எனவே, இந்நகராட்சி LCV வாகனங்களுக்கு, "The New India Assurance Co. Ltd.," நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள கீழ்காணும் பட்டியலின்படி, காப்பீடு (Insurance) தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | மதிப்பு | செலுத்த வேண்டிய தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | TN83 M 0046 | 2,00,000 | 19,384.00 |
| 2. | TN83 M 0043 | 2,00,000 | 19,384.00 |
| 3. | TN83 R 6457 | 2,00,000 | 21,013.00 |
| 4. | TN83 R 6490 | 2,00,000 | 21,013.00 |
| 5. | TN83 R 6427 | 2,00,000 | 21,013.00 |
| 6. | TN83 R 6448 | 2,00,000 | 21,013.00 |
| மொத்தம் ரூ | | | 1,22,820.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

பொது சுகாதாரப் பணிகளின் அவசியத்தினை கருதி, இந்நகராட்சி 6 LCV வாகனங்களுக்கு காப்பீடு (Insurance) தொகை செலுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0269/2022/எச்1)

**நகரமன்ற தீர்மானம் எண்.47 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

17) திருப்பத்தூர் நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையங்களான தென்பெண்ணை, அம்பலூர் ஆகியவற்றில் மோட்டார் இயக்கி நிரேற்றம் செய்யவும், சக்கரகுப்பம் Booster, பாலம்மாள் காலனி மற்றும் திருவண்ணாமலை சாலை (L&T) மேல்நிலை நிர்தேக்க தொட்டிகள், பாலம்மாள் காலனி RO Plant இயக்குவதற்கு போதுமான குடிநீர் பணியாளர்கள் இல்லாததாலும், குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் தனியார் மூலம் 16 ஒப்பந்தப் பணியாளர்கள் அமர்த்தி இயக்குவதற்கு மூன்று மாதகாலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.521/2021/இ1
**நகரமன்ற தீர்மானம் எண்.48 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

18) திருப்பத்தூர் நகராட்சியில் தற்போது கோடை காலத்தினை முன்னிட்டு நகரப் பகுதியில் வார்டு 19 முதல் 36 வரை உள்ள சிறுமின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்த்துளைக்கிணறுகளின் பயன்பாடு அதிகம் உள்ளதால் அவற்றினை உடனுக்குடன் பராமரிப்பு செய்து பொதுமக்களின் இதர பயன்பாடிற்கு கொண்டு வர 2022-2023ம் ஆண்டிற்கான பராமரிப்பிற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.308/2022/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.49 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

19) திருப்பத்தூர் நகராட்சியில் தற்போது நிலவி வரும் கோடையினை முன்னிட்டு நகரப்பகுதியில் வார்டு 1 முதல் 36 வரை உள்ள கைப்பம்புடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகளின் பயன்பாடு அதிகம் உள்ளதால் அவற்றினை உடனுக்குன் பராமரிப்பு செய்து பொதுமக்களின் இதர பயன்பாட்டிற்கு கொண்டு வர 2022-2023ம் ஆண்டிற்கான பாரமரிப்பிற்கு ஆகும் உத்சே மதிப்பீடு ரூ.3,00,000/-க்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.307/2022/இ1
**நகரமன்ற தீர்மானம் எண்.50 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

20) திருப்பத்தூர் நகராட்சியில் தற்போது கோடை காலத்தினை முன்னிட்டு நகரப் பகுதியில் வார்டு 1 முதல் 18 வரை உள்ள சிறு மின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்த்துளைக்கிணறுகளின் பயன்பாடு அதிகம் உள்ளதால் அவற்றினை உடனுக்குடன் பராமரிப்பு செய்து பொதுமக்களின் இதர பயன்பாடிற்கு கொண்டு வர 2022-2023ம் ஆண்டிற்கான பராமரிப்பிற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.309/2022/இ1
**நகரமன்ற தீர்மானம் எண்.51 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

21) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் LCV வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரித்தல், குப்பைகளை தரம் பிரித்து பெறுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு பொது சுகாதரப்பிரிவில் 6 எண்ணிக்கையில் LCV வாகனங்கள் (Light Commercial Vehicle) டிப்பர் லாரி -1, JCB -1, Jet Rodding வாகனம்-1 பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆண்டில் LCV வாகனங்களை வாகனங்களை FC பணிகள் மேற்கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தவும், பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி கட்டணம் செலுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-

பொது சுகாதாரப் பணிகளின் அவசியத்தினை கருதி, LCV வாகனங்களை FC பணி மேற்கொள்ளவும், பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி கட்டணம் செலுத்தவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0269/2022/எச்1)
**நகரமன்ற தீர்மானம் எண்.52 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

22) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இரண்டு ஒப்பந்த ஓட்டுநர்கள் மன்ற அனுமதி பெற்று பணியமர்த்தி ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலியின் அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது திரு.N.ஜெயராமன் என்பவர் நிரந்தர பணி நியமனம் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால், இந்நகராட்சி மூலம் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு சட்ட கருத்துரு வழங்க கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சட்ட கருத்துரு பெறும்வரை பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி, மேற்படி ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு பணி காலத்தை 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக நீட்டிப்பு செய்துக்கொள்ளவும், ஒப்பந்த ஓட்டுநர்கள் ஊதியத்திற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-:</u>

ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு பணிகாலத்தை 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக நீட்டிப்பு செய்துக்கொள்ளவும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2185/2005/எச்1)
**நகரமன்ற தீர்மானம் எண்.53 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

23) திருப்பத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-2022ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் செய்ய மாவட்ட ஆட்சித்தலவர் திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3611/2021/அ4-7 நாள்.28.03.2022 ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு ,9இக்பால் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறு மின் விசைபம்பு பொருத்துதல் | 2,25,000/- |
| 2 | வார்டு 282 (இடது புறம்) புதுபேட்டை ரோடு ,வது குறுக்குத் தெருவில் கழிவு நீர் கால்வாய்சிறுபாலம் மற்றும் பேவர் பிளாக் , சாலை அமைத்தல் | 3,50,000/- |
| | | ரூ.5,75,000/- |

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.938/2019/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.54 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| 24) நகரமன்ற தலைவர் கொண்டுவரும் கீழ்காணும் தீர்மானம் | | | |
|---|---|---|---|
| நகரமன்ற தலைவர் கொண்டுவரும் கீழ்காணும் தீர்மானம் | | | |
| வார்டு எண். | பணியின் விவரம் | நிதி ஆதாரம் பொது / குடிநீர் / கல்விநிதி | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
| 1 | தென்றல் நகரில் மழைநீர் கால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைதல் மற்றும் பொது கிணற்றில் மின் மோட்டார் அமைத்து பயன்பாட்டுக்கு கொண்டு வருதல். | பொது நிதி | 4.90 |
| 2 | B.K. நகரில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின்பம்பு அமைத்து பைப்லைன் அமைதல் பணி | குடிநீர் நிதி | 3.50 |
| 3 | ஏற்கனவே உள்ள ஆழ்த்துளை கிணற்றில் மின்பம்பு பொருத்தி சின்டெக்ஸ் உடன் பைப்லைன் சிமெண்ட் கான்கிரீட் சாலை மீது நீட்டிப்பு செய்து கான்கிரீட் போடுதல் பணி<br>1. போஸ்கோ நகர்<br>2. சிவராஜ் பேட்டை புதிய காலனி | குடிநீர் நிதி | 3.80 |
| 4 | கஸ்தூரிபாய் தெருவில் ரேஷன் கடை அருகே மழைநீர் கால்வாய் கட்டுதல், வார்டு பகுதியில் சிறுபாலம் அமைதல் பணி | பொதுநிதி | 3.20 |
| 5 | காந்திரோடு (ரயில்வே ஸ்டேஷன் சாலை) அணையா விளக்கு அருகில் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி | பொதுநிதி | 3.00 |
| 6 | சௌக்கத்தலி பேட்டை 4 வது தெருவிலும் மற்றும் பழனிசாமி தெரு நியூ சினிமா பின்புறமும் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின்பம்பு பொருத்துதல் மற்றும் மசூதி தெருவில் உபயோகத்திலுள்ள சிமெண்ட் தண்ணீர் தொட்டி லீக்கேஜ் சீரமைத்து பராமரித்தல் வண்ணமடித்தல் | குடிநீர் நிதி | 3.35 |
| 7 | பொன்னியம்மன் கோயில் தெரு கோயில் எதிரில் மற்றும் LIC அருகில் OHT பராமரிப்பு பணி செய்து மின்சார விசைபம்பு மற்றும் உதிரிபாகங்கள் பொருத்துதல் கை பம்பு பொருத்தி பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் பணி | குடிநீர் நிதி | 3.40 |
| 8 | எல்லையம்மன் கோயில் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | பொது நிதி | 3.60 |
| 9 | கோட்டை பூந்தோட்டம் தெருவில் சந்து வீதியில் மழைநீர் கால்வாயில் 10" PVC பைப் பதித்து சிமெண்ட் தளம் அமைத்தல் பணி | பொது நிதி | 3.50 |

| | | | |
|---|---|---|---|
| 10 | கந்தக தெரு, சிக்கந்தர் பேக் தெரு ஆஜிமியான் தெரு, TM சுலைமான் தெரு, பெருமாள் கோயில் தெரு ஆகிய தெருக்களில் சிறிய அளவிலான சிறுபாலம் மழைநீர் கால்வாய் கட்டுதல் மற்றும் குலாம் ரசூல் தெருவிற்கு காவேரி குடிநீர் கேட் வால்வு வைத்து இணைப்பு செய்தல் பணி | பொது நிதி | 3.10 |
| 11 | சேர்மேன் அப்துல் ஹக் தெருவில் சிறிய அளவிலான சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி, புதூர் மாரியம்மன் கோவில் தெருவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிக்கு மின்மோட்டார் பொருத்தி, பைப்லைன் பதிதல் பணி | பொது நிதி | 3.30 |
| 12 | முத்துகார தெரு ராவ் மஹால் சந்து மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி | பொது நிதி | 3.00 |
| 13 | தருமராஜா கோவில் தெரு ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிக்கு மின்மோட்டார் பொருத்தி சிமண்ட் OHT பராமரிப்பு செய்து பைப்லைன் பதிதல் பணி | குடிநீர் நிதி | 3.00 |
| 14 | புதுபேட்டை ரோடு பழைய EB சந்து வீதிக்கு குடிநீர் வசதி செய்ய திரு.வி.க ரோடு கஸ்தூரி Ex MC வீட்டு முன் –ல் இருந்து இணைப்பு செய்து கேட் வால்வு சிஸ்டம் அமைத்தல், கொடிகம்பம் அருகில் தண்ணீர் தொட்டி சீரமைத்தல் மற்றும் இதர பணி | குடிநீர் நிதி | 4.00 |
| 15 | வள்ளுவர் நகரில் சிறுபாலம் –2 அமைத்து மற்றும் தங்கராஜ் நகரில் குடிநீர் பகிர்மான பதிதல் பணி | குடிநீர் நிதி | 3.75 |
| 16 | 16 வது வார்டு பகுதிக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் Stainless Steel பொன் மொழிகளுடன் கூடிய பெயர்ப்பலகை அமைதல் | பொது நிதி | 4.00 |
| 17 | பொன்னு கிருஷ்ணசாமி தெரு, EL கோவிந்தராவ் தெரு பின்புற சந்தில் மழை நீர் கால்வாய் கட்டுதல் சிமெண்ட் தளம் இரும்பு கேட் அமைதல் பணி | பொது நிதி | 3.00 |
| 18 | T.P. புரான் தெரு மற்றும் சின்ன குளம் மாரியம்மன் கோயில் தெருவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு மின் மோட்டார் பொருத்தி பைப்லைன் அமைதல் பணி | பொது நிதி | 3.00 |
| 19 | காளியம்மன் கோயில் தெரு மற்றும் கருத்தப்பர் தெருக்கு குடிநீர் சீராக வழங்க கேட்வால்வு அமைப்புகள் ஏற்படுத்தி குழாய் பதித்தல் காளியம்மன் கோயில் தெருவில் கம்ப்ரசர் 2 HP மோனோ பிளாக் பொருத்தி EB பாக்ஸ் சீரமைத்தல் பணி | குடிநீர் நிதி | 3.00 |

| | | | |
|---|---|---|---|
| 20 | நேதாஜி ரோட்டில் குறுக்கு சந்தில் உள்ள OHTக்கு தண்ணீர் வசதி செய்தல் மற்றும் பாரதி ரோடு தண்ணீர் தொட்டி பராமரித்து வண்ணமடித்தல் பணி | குடிநீர் நிதி | 3.00 |
| 21 | வேணுகோபால் சாமி கோயில் தெருவில் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | பொது நிதி | 3.50 |
| 22 | சந்தமியான் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைதல் பணி | பொது நிதி | 3.50 |
| 23 | ஆரிப் நகரில் ஏற்கனவே மின்கம்பம் உள்ளது மின்வாரியம் மூலம் கம்பி அமைத்து புதிய LED மின்விளக்கு அமைதல் பணி | பொது நிதி | 3.00 |
| 24 | டாக்டர் அம்பேத்கார் சிலை பின்புறம் அப்பாய் தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைதல் மேலும் அதே வீதியில் (முனிதாஸ் Ex MC வீட்டு பக்கம் ) உள்ள சிமெண்ட் தண்ணீர் தொட்டி பழுதுபார்த்து பராமரிப்பு பணி செய்து வண்ணம் அடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவருதல் பணி | குடிநீர் நிதி | 4.20 |
| 25 | பீர்பால் நன்னுமியான் தெரு கடைசி ரேஷன் கடை புது தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் மற்றும் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் புதுப்பித்து பைப்லைன் நீட்டிப்பு செய்தல் பணி | குடிநீர் நிதி | 3.25 |
| 26 | கௌதம் பேட்டையில் சமுதாய கூடம் பராமரிப்புபணி மற்றும் சிறுபாலம் அமைதல் போதுகிணறு பராமரித்தல் பணி செய்தல் | பொது நிதி | 3.30 |
| 27 | வடக்கு முத்தப்பர் தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் மற்றும் 2 சிறுபாலம் அமைத்தல் பணி | குடிநீர் நிதி | 6.00 |
| 28 | புதுபேட்டை ரோடு ICDS சந்து வீதி மழைநீர் கால்வாய் அமைத்தல் ICDS ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பள்ளிக்கு கழிவறை அமைத்தல் பணி Love o Factory அருகில் | கல்வி நிதி | 4.50 |
| 29 | புதுபேட்டை ரோடு 7வது தெரு காந்திநகர் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி | குடிநீர் நிதி | 3.00 |
| 30 | சந்திரன் நகர், ராஜீவ் காந்தி நகரில் ஏற்கனவே அமைத்துள்ள ஆழ்துளை கிணற்றிக்கு மின் விசைபம்பு அமைத்தல் மற்றும் கண்ணனூர் மாரியம்மன் கோயில் எதிரில் மின் விளக்கு அமைதல் | குடிநீர் நிதி | 3.65 |
| 31 | மருத்துவர் தெரு விடுபட்ட பகுதியில் 3 பகிர்மான குழாய் பதிதல் மற்றும் 110mm PVC குழாய் மற்றும் அதற்க்கான சுலீஸ் வால்வு பொருத்தி அவ்வை நகர் OHTக்கு தண்ணீர் ஏற்றுதல் பணி | குடிநீர் நிதி | 3.30 |
| 32 | இந்திராநகர் நகராட்சி பொது கிணறுக்கு இரும்பு கிரில் அமைத்து பாதுகாப்பு ஏற்படுத்துதல் பணி மற்றும் TNHB – II – ல்சிறுபாலம் கட்டுதல் மற்றும் கோவில் எதிரில் மின்விசைபம்பு புதுப்பித்தல் பணி | பொது நிதி | 3.60 |

| | | | |
|---|---|---|---|
| 33 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி –I –ல் 2 எண்கள் சிறுபாலம் கட்டுதல் மற்றும் கால்வாய் அமைதல் பணி | பொது நிதி | 3.50 |
| 34 | பெரியார் நகரில் மழைநீர் கால்வாய் கட்டுதல் தடுப்பு சுவர் அமைத்தல் பணி | பொது நிதி | 3.30 |
| 35 | அண்ணா நகர் மேற்கு வீதியில் மழைநீர் கால்வாய் அமைதல் பணி மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் பணி | பொது நிதி | 3.65 |
| 36 | பா.உ.சா. நகரில் மழைநீர் கால்வாய் சிறு பாலம் கட்டுதல் பணி | பொது நிதி | 3.70 |

**நகரமன்ற தீர்மானம் எண்.55 நாள்.08.04.2022**
**அலுவலக குறிப்பு மேற்காணும் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

// உண்மைநகல் //

ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**திருப்பத்தூர் நகராட்சி**

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் நடத்தப்பட்ட அவசர கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல்.

1) திருப்பத்தூர் நகராட்சி தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம், அம்பலூர் தலைமை நீரேற்று நிலையம், மற்றும் சக்கர குப்பம் பூஸ்டர் ஸ்டேசன், நகர பகுதியில் உள்ள இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பாலம்மாள் காலனி ஆர். ஓ. பிளாண்ட் ஆகியவற்றினை இயக்குதல் பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (ஏப்ரல் 2022 – ஜீன் 2022) பணிக்கு 20.04.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு,

| வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தபுள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் |
|---|---|---|
| திருப்பத்தூர் நகராட்சி தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம், அம்பலூர் தலைமை நீரேற்று நிலையம், மற்றும் சக்கர குப்பம் பூஸ்டர் ஸ்டேசன், நகர பகுதியில் உள்ள இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பாலம்மாள் காலனி ஆர். ஓ. பிளாண்ட் ஆகியவற்றினை இயக்குதல் பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (ஏப்ரல் 2022 – ஜீன் 2022) பணி | 6.10 | 1) KVM Construction.<br>44 KVM Kalyna Mandapam Complex, Alangayam Road,<br>Vengalapuram. Tirupattur<br>(மதிப்பீட்டை விட குறைவு 4.96 %) |
| | | 2)P&M Enterprises,<br>1H சத்தி நகர்,<br>கருக்கம் பாளையம்,<br>ஈரோடு.<br>(மதிப்பீட்டை விட அதிகம் 0.35%) |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் KVM Construction. 44 KVM Kalyna Mandapam Complex, Alangayam Road, Vengalapuram. Tirupattur. என்பவர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் KVM Construction. அவருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்டுள்ள பணி குடிநீர் பணி என்தால் இயக்குதல் பணிக்கு ஒதுக்கப்படும் தொகையினை குடிநீர் நிதி 2022–23 ஆம் நிதியாண்டில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேற்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல் வரப்பெறும் வரை பணியினை மேற்கொள்ளவும், அங்கீகரிக்கப்பட்ட விடலைப்பட்டியல் வரப்பெற்றவுடன் KVM Construction அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு ரத்து செய்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 321/2022/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.56 நாள்.29.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

2) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு (ஏப்ரல் 2022 – ஜீன் 2022) பணிக்கு 20.04.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு,

| வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தபுள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் |
|---|---|---|
| திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ஏப்ரல் 2022 – ஜீன் 2022) | 11.00 | 1) KR Enterpriswes,Tirupattur<br>**(மதிப்பீட்டை விட அதிகம் 1.19 %)** |
| | | 2) KVM Construction.<br>44 KVM Kalyna Mandapam Complex, Alangayam Road,<br>Vengalapuram. Tirupattur<br>**(மதிப்பீட்டை விட குறைவு 4.97 %)** |
| | | 3)Raanas Construction & Builders, Tirupattur<br>**(மதிப்பீட்டை விட அதிகம் 1.05%)** |
| | | 4) A.C. சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர்<br>**(மதிப்பீட்டை விட அதிகம் 1.11 %)** |
| | | 5) P&B Enterprises,<br>1H சத்தி நகர்,<br>கருக்கம் பாளையம், ஈரோடு.<br>**(மதிப்பீட்டை விட அதிகம் 0.30%)** |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் KVM Construction. 44 KVM Kalyna Mandapam Complex, Alangayam Road, Vengalapuram. Tirupattur. என்பவர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் KVM Construction. அவருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்டுள்ள பணி தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி என்தால் இப்பணிக்கு ஒதுக்கப்படும் தொகையினை பொது நிதி 2022-23 ஆம் நிதியாண்டில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேற்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல் வரப்பெறும் வரை பணியினை மேற்கொள்ளவும், அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல் வரப்பெற்றவுடன் KVM Construction அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு ரத்து செய்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1342/2016/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.57 நாள்.29.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

3) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் நடைபெற்று வருகிறது. சாலைப்பணிகள் நடைபெறுவதற்கு முன்னர் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்து குழாய் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளதால், 3" PVC பகிர்மானக் குழாய் அமைக்கவும், அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டுள்ள பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச மதிப்பீட்டு தொகையில் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணிக்கான செலவீனத் தொகையினை குடிநீர் நிதி 2022-23 ஆம் நிதியாண்டில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 414/2022/இ1

**நகரமன்ற தீர்மானம் எண்.58 நாள்.29.04.2022**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

4) தமிழ்நாடு வேளாண் நிதி நிலை அறிக்கை 2022-23 அறிவிப்பு எண் 57-ல் திருப்பத்தூர் உழவர் சந்தையில் 7 சென்ட் நிலத்தில் உழவர் ஆலோசனை மையக் கட்டடம் புதியதாக கட்டுவதற்கு "ஆட்சேபனை ஏதும் இல்லை" என்ற சான்று மற்றும் நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றி கடிதம் வழங்கக் கோரி வேளாண் துணை இயக்குநர், வேளாண் வணிகம், 605/1 வள்ளலார் நகர், ஆசிரியர் நகர் அஞ்சல், திருப்பத்தூர் அவர்களின் கடித எண் 1/324/2022 நாள் 19.03.2022 மற்றும் 21.04.2022-ல் வரப்பெற்று உள்ளது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு -1, பிளாக் -19, நகரளவு எண் 500/2-ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உழவர் சந்தை இயங்கி வருகிறது. உழவர் சந்தை இயங்கி வரும் வளாகத்திற்குள் 7 சென்ட் நில பரப்பில் விவசாயிகள் அலோசனை மையக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக ஒரு பக்கமாக கட்டடம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்து தரவும், மேலும் வேளாண்மை துறையின் மூலம் நகராட்சிக்கு வாடகை செலுத்த கோரி கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதால், 7 சென்ட் இடத்திற்கு மேல் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக் கூடாது. மேற்குறிப்பிட்ட ப்யன்பாட்டினை தவிர்த்து வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்த கூடாது.
3. நகராட்சிக்கு இடம் தேவைப்படும் பட்சத்தில், இடத்தினை நகராட்சிக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் வழங்கலாம்.
4. மேற்கண்ட அனைத்து விதிமுறைகளும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டது.

ந.க.எண் 387/2022/எப்1

**நகரமன்ற தீர்மானம் எண்.59 நாள்.29.04.2022**
**அலுவலக குறிப்பு நகராட்சிக்குச் சொந்தமான உழவர் சந்தை வளாகத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநல் அவர்களின் அனுமதி பெற்று, பிறகு இடம் ஒதுக்கீடு செய்து நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்க அனுமதிக்கப்பட்டது.**

// உண்மைநகல் //

ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.